பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 20 (6—10—71) புதன் வெளியூர்: புரட்டாசி 21 (7—10—71) வியாழன் [இதழ்: 94

பூச்சிமருந்து தெளிக்கப் புதுவகைஹெலிகாப்டர்

பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதற்காக, பல நோக்குப் பயனுள்ள ஹெலிகாப்டர்களை இந்தியாவில் அறிமுகப்படுத்த சோவியத் ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது.

பல மாநிலங்களையும் சேர்ந்த தனிப்பட்டவர்களிடம் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக இரஷ்ய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு- மைசூர் --மாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் தனி அக்கறை காட்டி வருகின்றன என்று கூறப்படுகிறது.

தொழு நோய் உள்ளத்தவர் கூற்று

பாராட்ட வேண்டிய பணிகளுக்குக் களங்கம் கற்பிக்கும் போக்கு

பிச்சைக்காரர் நலனுக்கு ஒரு காசும் ஈயாதோர் கணக்குக் கேட்கும் விசித்திரம்

'கண்ணொளி மங்கியவருக்குச் சென்னை நகரமே மங்கித் தெரிகிறது'-- சீரணியினர் நிதியளிப்பு விழாவில் கலைஞர் கருணாநிதி கண்டனம்

சென்னை, அக். 6 —

"'பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும்' என்று நாம் கூறுவதற்கும், 'பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கப்பட வேண்டும்' என்று பிறர் கூறுவதற்கும் வேறுபாடு உண்டு.

"காரிலே போகின்றபோது பிச்சைக்காரர்கள் கை நீட்டினால், 'இந்தத் தொல்லை தீராதா' என்று சிலர் முணுமுணுக்கிறார்கள்.

"பேருந்து வண்டிக்காகக் காத்திருக்கும்போது பிச்சைக்காரர் கை நீட்டினால், 'இந்தத் தொல்லை தீராதா' என்று சிலர் முணுமுணுக்கிறார்கள்!

"அப்படியெல்லாம் அல்ல -- நமது அரசின் சிந்தனை; 'பிச்சைக்காரர் படும் தொல்லை தீராதா' என்று அரசு நினைக்கிறது -- அவர்களின் அந்தத் தொல்லையை நீக்கத்தான் பாடுபடுகிறது!

"இத்தகைய பணிகளால் கழக அரசுக்குக் கிடைக்கும் கீர்த்தியை, வடக்கே இருக்கின்ற சிலரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை; நிலையான அரசு -- அமைதியான அரசு தமிழகத்தில் இருக்கிறதே' என்ற எரிச்சல் அவர்களுக்கு! 'தமிழகத்து மக்கள் யாரைத் தேர்ந்தெடுத்தாலும் -- எந்தக் கட்சியைத் தேர்ந்தெடுத்தாலும் -- முழுமையாகத் தேர்ந்தெடுத்து நிலையான அரசை அமைத்துவிடுகிறார்களே' என்ற ஏக்கம் அவர்களுக்கு!

"அப்படி அமைகின்ற அரசும் 'ஏழைகள் அரசாக -- பிற்பட்டோர் நலம் காக்கும் அரசாக -- 1972-ம் ஆண்டுக்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தரும் அரசாக -- பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரும் அரசாக அமைந்துவிடுகிறதே' என்பதால் பொறுக்க முடியாத ஆத்திரம் அவர்களுக்கு!"

என்று முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்கள், நேற்று மாலை கலைவாணர் அரங்கில் சீரணி சார்பில் நடந்த பாராட்டு விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்; அவர் மேலும் பேசியதாவது :—

"நாம் துவக்கிய சிறந்த திட்டங்களுள் ஒன்று பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்; அதன்படி, காந்தியார் பிறந்த நாளில் பரனூர் எனும் கிராமத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி திறக்கப்பட்டது.

அப்போது, 'நான் ஆலயத்திற்கு அடிக்கடி போவதில்லை; அப்படியே போனாலும் அங்குள்ள ஆண்டவனை வணங்குவதில்லை; ஆனால், இனி நான் வருகிற ஆலயம் இதுதான்; வணங்குகின்ற ஆலயம் இங்குள்ள ஏழைகளின் நல்ல நெஞ்சங்களே' என்று கூறினேன்.

அந்த விடுதியில் 250 தொழுநோய் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கூர்த்த மதி கொண்டோர் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்.

முகமது அலி என்பவர், விரல்களே இல்லாமல் வெறும் உள்ளங்கையோடு இருப்பவர்; அவர்தான் தொழு நோய்க்காரர்களின் சங்கத் தலைவர்; அவர், நல்ல தமிழில் -- இலக்கண இலக்கிய வளத்தோடு கவிதை வரிகளைப் பாடினார்; ஒரு வரி, இரண்டு வரி அல்ல-- 100 வரி கொண்ட கவிதை!

'இவ்வளவு அறிவும் விவேகமும் கொண்டவர்கள் தொழுநோய்க்காரர்களாக இருக்கிறார்களா' என்பதை அறிந்து கண்கலங்கினேன்!

என்ன செய்வது? சிலருக்கு உடலில் தொழுநோய் இருக்கும் -- உள்ளம் நல்லுள்ளமாக இருக்கும்! சிலருக்கு உடல் நன்றாக இருக்கும் -- உள்ளம் தொழுநோய் கொண்டதாக இருக்கும்!

நல்ல உள்ளம் படைத்திருந்தாலும், வாழ்க்கையின் ஓரத்தில் வீசப்பட்டு, சாக்கடைச் சகதியிலும்--கும்மிருட்டிலும் வாழும் மனிதர்களின் வாழ்வில் விளக்கேற்றும் பொறுப்பை நாம் மேற்கொண்டிருக்கிறோம்; இதற்காகப் பலரும் பாராட்டுகிறார்கள்.

நமது கட்சிக்காரர்கள் பாராட்டுவது இயற்கை; ஆனால், மால்கம் ஆதிசேஷய்யா போன்றவர்கள் நான் பாரிசுக்குச் சென்றபோது, தமிழகத்தில் தமிழ்க் கலாச்சாரம் தழைத்திட -- சமதர்ம நோக்குடன் அரசு நடத்துவதற்காகப் பாராட்டினார்கள்; ஆனால், நம் நாட்டிலேயே இருப்பவர்களுக்குத்தான் அந்த இயல்பு வருவதில்லை!

அமெரிக்காவிலிருக்கும் ஆம்ஸ்ட்ராங் சந்திரனுக்குப் போனார் என்றால், அய்யம்பேட்டையிலுள்ளவர், 'ஆகா' என்று பாராட்டுவார்; ஆனால் அய்யம்பேட்டையில் அவர் வீட்டுக்குப் பக்கத்திலுள்ளவர் சந்திரமண்டலம் போய் வந்தாலும், 'இதென்ன பிரமாதம்' என்று கூறுவார்!

அதுபோல நம்மவர்கள் -- அண்டை மாநிலத்தார் -- பெருமைக்குரிய காரியம் செய்கிறார்கள் என்றால், பாராட்ட மனம் வருவதில்லை!

இங்கே அரசியல் பேச வரவில்லை; ஆனால் அரசியல் நாகரிகம் எப்படியிருக்கிறது என்று சுட்டிக்காட்டுவது தவறல்ல!

பம்பாயிலிருந்து வரும் 'எகனாமிக்ஸ் டைம்ஸ்' எனும் பத்திரிகையின் சார்பில் யாரோ ஒருவர், அதில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்; அவர் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு ரூ. 44,444

சீரணியின் சார்பில் அளிக்கப்பட்டது

சென்னை, செப். 6--

சென்னை கலைவாணர் அரங்கில் சீரணி சார்பில் நேற்று நடைபெற்ற விழாவில், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கென வசூலிக்கப்பட்ட ரூ 44,444-ஐ விழாத் தலைவரான அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், முதலமைச்சர் கருணாநிதி அவர்களிடம் அளித்தார்.

விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க நடவடிக்கை

அரசியல்--பொருளாதார இணைக்கக் குழுவின் நீண்ட ஆலோசனை

உற்பத்தி அளவை உயர்த்துவது பற்றி இரு வேறு யோசனைகள்

புதுடில்லி, அக். 6—

மத்திய அரசின் அரசியல் – பொருளாதார இணைக்கக் குழுக்களின் இரண்டு மணி நேரக் கூட்டத்தில், பொருளாதார நிலைமை – தொழில் உற்பத்தித் தேக்கம் பற்றியும், விலைவாசிகள் வரைமுறையின்றி ஏறுவதைப் பற்றியும் விவாதித்தனர்; முடிவு எதும் எடுக்கப்படவில்லை.

இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த விலை – கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று பெரும்பான்மையோர் கருத்துத் தெரிவித்தனர்.

விலைக் கட்டுப்பாடுகளை எதிர்த்தவர்கள், இத்தகைய கட்டுப்பாடுகள் பணவீக்கத்தைத் தணிப்பதற்குப் பதிலாக உற்பத்தியைப் பாதிப்பதுடன் புதிய மூதலீடுகளைத் தடுத்துவிடுமென்று கூறியதாகத் தெரிகிறது.

உற்பத்திச் சக்தியை மேற்கொண்டு 25 சதவிகிதம் அதிகரிக்கலாம் என்று இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது; அதை மூன்றில் ஒரு பங்கு அல்லது சரிபாதி என்று உயர்த்தலாமா என்றும் பரிசீலனை செய்யப்பட்டது.

தொழிற்சாலை உற்பத்திகள் சுணக்கம் மத்திய அரசுக்குக் கவலையளித்து வருகிறது; இதனால், சித்தாந்த ரீதியான சில கட்டுப்பாடுகளை நீக்கலாமா என்பது பற்றியும் தீவிரமாக யோசிக்கப்பட்டு வருகிறது.

பின்தங்கிய பகுதிகளில் நடுத்தர தொழில் துறைகளில், பெரிய தொழிலதிபர்கள் முதலீடு செய்வதற்கு வசதியாகச் சில சலுகைகள் தரலாமா என்றும் கவனிக்கப்படுகிறது.

பின்தங்கிய பகுதிகள் என்பது, இப்போதிருப்பதைவிட இன்னும் சிறிது தாராளமாக வியாக்கியானம் செய்யப்படலாம்.

இப்போது ஒரு மாநிலத்தில் இரு மாவட்டங்கள் பின்தங்கிய பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டு, அந்தப் பகுதிகளில் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

பரிசுச் சீட்டு அதிகாரிகள் கைது

ஸ்ரீநகர், அ[illegible]

காஷ்மீர் அரசின பரிசுச் சீ[illegible] துறையைச் சேர்ந்த 30 அதிக[illegible]கள் போலீசாரால் கைது செய்ய[illegible]பட்டிருக்கின்றனர்.

மோசடி -- கையாடல் செய்ததாக அவர்கள்மீது கூறப்பட்ட புகார்களைத் தொடர்ந்து விசாரணைக்காக அவர்கள் கை[illegible] செய்யப்பட்டிருப்பதாகக் கூ[illegible] படுகிறது.

பரிசுச் சீட்டுத் துறையில் சோதனைகள் நடத்திப் போலீசார் சில சான்றேடுகளைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

தமிழகமீன்பிடித்தொழிலுக்கு டில்லியின் முட்டுக்கட்டை

ஆய்வு நடத்துவதற்கான படகுகளைத் தராமல் தட்டிக்கழிப்பு

அமைச்சர் சத்தியவாணிமுத்து வெளியிடும் வேதனைமிகு தகவல்

இராமேசுவரம், அக். 6—

"நம் நாடு சுதந்தரம் பெற்று 20 ஆண்டுகளாகியும் 'எந்தப் பகுதியில் எந்த மீன் அதிகம் பிடிபடும்' என்று இதுவரை ஆய்வு நடத்தப்படவில்லை; இந்த ஆய்வு நடத்த 4 படகுகளை மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டது; மத்திய அரசு பொருத்தமற்ற காரணங்களைக் கூறித் தட்டிக்கழிக்கிறது; மத்திய அரசு உதவினால் தமிழகம் மீன்பிடித் தொழிலில் பெரும் வெற்றிபெறும்; ஆனால் தமிழகத்தின் மீன்பிடித் தொழிலுக்கு மத்திய அரசு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது; இதனால் நாம் பின்தங்கியுள்ளோம்; டில்லி ஓரவஞ்சகத்துடன் நடக்கிறது!

"டில்லி ஒத்துழைப்புத் தந்திருந்தால், தூத்துக்குடித் துறைமுக வேலை எப்போதோ நடந்து முடிந்திருக்கும்; டில்லி காலதாமதம் செய்கிறது; இதனால் நமக்கென்று ரூ. 15 இலட்சத்தில் மணல் வாரி கப்பல் வாங்க அரசு முடிவு செய்துள்ளது; சென்னையில் ரூ. 3.50 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்."

என்று அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கினர்.

இராமேசுவரத்தில் மீன்பிடி மோட்டார் படகுகள் நிற்பதற்கு ரூ. 10 இலட்சம் செலவில் மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது; இதன் திறப்பு விழாவிற்கு திரு சத்தியேந்திரன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கினர்.

துறைமுகத்தைத் திறந்து வைத்து அமைச்சர் பேசியதாவது:—

"மீன்பிடித் தொழில் ஒன்றை மட்டும் வைத்தே தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்.

நவீன விஞ்ஞானச் சாதனங்களைப் பயன்படுத்திக் கேரள மாநிலம் மீன்பிடித் தொழிலில் சிறப்பான இடம் வகிக்கிறது.

தமிழகம் மீன்பிடித் தொழிலில் மிகவும் பின்தங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மீன் சாப்பிடுபவர்கள் குறைவு; இதற்குக் காரணம், மீன் அதிக விலைக்கு விற்பதுதான்; அதற்குக் காரணம் போதிய மீன் பிடிப்பு இல்லை.

நாம் இன்னும் ஆழ்கடல் மீன் பிடிப்பு முறையைக் கையாளவில்லை.

அண்மையில் மண்டபத்தில் ஒரே நாளில் ஒரு படகில் 50 டன் மீனைப் பிடித்து புதிய சாதனை உண்டாக்கினர்கள்; இது மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

மீன் துறை இணை இயக்குநர் எஸ். டி. சாரி நன்றி கூறினர்.

அமைச்சருக்குத் தீவு மீனவர் சங்கச் சார்பிலும் -- மீனவர் சார்பிலும் வரவேற்புத் தரப்பட்டது.

திரு. சத்தியேந்திரன் தலைமை தாங்கினர்.

ஜோசப், முகமது ஆபில் மற்றும் பலர் மீனவர் தேவை பற்றிப் பேசினர்கள்.

அமைச்சருக்கு இராமேசுவரம் இரயில் நிலையத்தில் வரவேற்புக் கொடுக்கப்பட்டது நகர் தி.மு.க. செயலாளர் துரைராஜ் தலைமையில் ஏராளமான தி.மு.க. தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

எதிர்காலச் செல்வங்களுக்குப் புத்தொளி ஏற்றிட..!

வேலூர், அக். 6—

"குழந்தைகள்தான் நாட்டின் எதிர்காலச் செல்வங்கள்; எதிர்காலத்தில் அவர்கள் சிறந்து விளங்க வேண்டுமானால், உடல் உரம் பெறத்தக்க வகையில் ஊட்டச் சத்துமிக்க சத்துணவை அவர்களுக்கு வழங்க வேண்டும்; அதுபோன்று வழங்க வேண்டியது மருத்துவர்களுடையவும் மற்றவர்களுடையவும் இன்றியமையாக் கடமையாகும்.

"குழந்தைகள் நலத்தில் நாம் போதிய அக்கறை எடுத்துக்கொள்வதில்லை; அவர்களது நலத்தில் தனிக் கவனம் செலுத்திட நாம் தவறி விடுகிறோம்.

"நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவல்ல இளம் குழந்தைகளுக்கு எந்தெந்த உணவை--ஊட்டச் சத்துமிக்க உணவைக் கொடுக்க வேண்டுமென்று நாம் தெரிந்துகொள்வதில்லை; இது மருத்துவர்களுக்குத் தெரிகிறது; ஆனால் கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு--பாமர மக்களுக்குத் தெரிவதில்லை.

"எந்தெந்த ஊட்டச் சத்துமிக்க உணவைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப் பாமரர்களும் அறிந்துகொள்ளும் வகையில் நம் நாட்டு மருத்துவர்கள் தெரிவிப்பது அவசியம். கழக அரசு இத்தகைய பணியில் ஈடுபட்டு வருகிறது.

"நம் நாட்டின் செல்வங்களான குழந்தைகள் வலிமையுடன்--வனப்புடன்--சக்தியுடன்--செழிப்புடன் குலுங்கிடத்தக்க வகையில் திகழ வேண்டும்.

"எதிர்காலத்தில் புத்தொளி பாய்ச்சிட---குழந்தைகள் வளத்துடன் வளர்ந்திட--நாம் போதிய அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்."

—முதலமைச்சர் கருணாநிதி

(வேலூர் கிருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில்)

பிச்சைக்காரர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தமிழகத்தின் முயற்சி

பிற மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும்

அண்டை மாநிலப் பிச்சைக்காரர்கள் வருகையைத் தவிர்க்கத் தமிழக முதல்வரின் யோசனை

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் பற்றி முதலமைச்சர் கருணாநிதி அவர்களை நிருபர்கள் கேட்ட கேள்விகளும் – கலைஞர் தந்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு எவ்வளவு தொகை சேர்ந்தது? அந்தத் தொகை எப்படிச் செலவு செய்யப்படும்."

பதில்:—"இதுவரையில் ரூ. 90 இலட்சம் சேர்ந்திருக்கிறது; அந்தத் தொகையை ஊர்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதிகள் அமைக்கச் செலவு செய்யப் போகிறோம். இந்த ஆண்டு ரூ. 7 இலட்சம் செலவில் 3 ஊர்களில் விடுதி கட்டப்போகிறோம்; அதில் ஒன்று பரனூர் (செங்கற்பட்டு மாவட்டம்) என்ற ஊரில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது; மற்ற 2 விடுதிகள் பர்கூர் (தர்மபுரி மாவட்டம்), உளுந்தூர்ப்பேட்டை (தென்னாற்காடு) ஆகிய இடங்களில் கட்டப் போகிறோம்."

கேள்வி:—"மற்ற மாநிலத்துப் பிச்சைக்காரர்கள் தமிழ்நாட்டுக்கு வராமல் இருக்க அடையாளக் கார்டு கொடுக்கப்படுமா?"

பதில்:—"அப்படி எண்ணம் இல்லை; மற்ற மாநிலங்களும் தக்க வசதிகளைச் செய்யும் என்று நினைக்கிறேன்; தமிழ்நாட்டில் இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளில இந்தப் பிரச்சினை முழுமையுமாக நீங்கிவிடும்; மற்ற மாநிலங்கள் நமது இந்தக் கொள்கையைப் பின்பற்றும் என்று கருதுகிறேன்; அப்படி இல்லையென்றால், அது பற்றிப் பிறகு யோசிப்போம்.

"தொழு நோயாளிகள் தவிர மற்றப் பிச்சைக்காரர்களுக்கும் இந்த விடுதிகளில், போகப் போக வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

"காய்கறித் தோட்டம் போடுதல்—கயிறு திரித்தல் — பாய் முடைதல் போன்ற வேலைகளை அவர்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்."

தலைமையமைச்சர் கூற்று மாநில சுயாட்சி--

கேள்வி:— "முதலமைச்சர்கள் மாநாட்டில், மாநில சுயாட்சி பற்றி எதுவும் பேசப் போவதில்லை என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி சொல்லி இருக்கிறாரே -- அதுபற்றி உங்கள் கருத்து என்ன?"

பதில்:—"முதலமைச்சர்களைக் கலந்து பேசாமலேயே மாநில சுயாட்சி கொடுக்கலாம் என்று அவர் நினைத்து இருக்கலாம்; அதில் நியாயம் இருக்கிறது என்று உணர்ந்திருக்கலாம்."

ஓய்வு பெறும் வேலூர் மருத்துவக் கல்லூரி இயக்குநர்

டாக்டர் வெப்புக்கு கலைஞர் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்

வேலூர், அக். 4—

கடந்த 18 ஆண்டுகளாக வேலூர் கிரிஸ்டியன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இயக்குநராகப் பதவி வகித்துவந்த டாக்டர் ஜே. கே. ஜி. வெப், பதவியிலிருந்து விலகி இங்கிலாந்து செல்கிறார்.

அவருக்கு நடைபெற்ற பாராட்டு விழா ஒன்றில், முதலமைச்சர் கருணாநிதி உட்படப் பலர், அவரது சேவையைப் புகழ்ந்து பேசினர்.

முதலமைச்சர் அவர்கள், டாக்டர் வெப்புக்குப் பொன்னாடை போர்த்தினர்.

அமைச்சர்கள் ப. உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், நகராட்சித் தலைவர் மா. பா. சாரதி ஆகியோரும், நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு டாக்டர் வெப் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

"என்னுடைய 'தாய் நாட்டில்' இருப்பது போன்ற உணர்வையே இங்கு நான் பெற்றிருந்தேன்" என்று டாக்டர் வெப் குறிப்பிட்டார்.

மருத்துவமனையின் அடுத்த இயக்குநராக டாக்டர் கே. ஜி. கோசி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேற்கு வங்கத்தில் அமைதிக் குலைப்பு முயற்சி

டில்லியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

புதுடில்லி, அக். 5—

மேற்கு வங்கத்தில் துர்க்கா பூசை விடுமுறைக்குப் பிறகு அரசியல் வன்முறைகள் பெரும் அளவில் ஏற்படக்கூடும் என்பதை எதிர்பார்த்து, மத்திய அரசு எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருகிறது.

எந்த நிலைமையிலும் சட்டம் — ஒழுங்கை நிலை நிறுத்துவது என்று மத்திய அரசு தீர்மானித்திருக்கிறதாம்.

நிலைமை குறித்து விவாதிக்க ஆளுநர் டயசை டெல்லிக்கு வருமாறு மத்திய அரசு அழைத்திருக்கிறது.

அடுத்த ஆண்டில் மாநிலங்களில் பொதுத்தேர்தல் நடைபெறும் போது மேற்கு வங்கத்திலும் தேர்தல் நடத்த வேண்டுமென்று இடது கம்யூனிஸ்டுக் கட்சி கோரிவருகிறது; ஆனால், 'சட்டம் -- அமைதி ஒழுங்கு நிலைக்கு வந்தால்தான் தேர்தல் நடத்தப்படும்' என்று மத்திய அரசு உறுதியாக இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

அகதிகள் பற்றிய ஐ. நா. நிறுவன அறிக்கை

களவாடப்பட்டுவிட்டதாகத் தகவல்

டாக்கா, அக். 5—

கிழக்கு வங்க நிலைமை குறித்து ஐ. நா. அகதிகள் மறுவாழ்வு நிறுவனம் தயாரித்திருந்த அறிக்கை, லாகூர் ஓட்டல் ஒன்றிலிருந்து திருட்டுப் போயிருக்கிறது.

இந்நிறுவனத்தின் தலைவர் இஸ்லாமாபாத்துக்கு இந்த அறிக்கையைக் கொண்டு செல்லும்போது, இது களவாடப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் அரசு, அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிக்கையைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்து வருகிறது.

எல்லா விமான நிலையங்களும் முன்னெச்சரிக்கை செய்யப்படுத்தப்பட்டிருக்கின்றன.

உணவுப் பற்றுக்குறை தொடர்ந்து நீடிக்கும்

உற்பத்தி -- பெருக்கினால் செல்வ நாடுகள் பயனடையும்

உலக உணவு -- வேளாண்மை நிறுவனத்தின் மதிப்பீடு

ரோம், அக். 6—

1980-ம் ஆண்டுடன் முடியும் பத்தாண்டுக் காலத்தில், விவசாயப் பண்டங்களின் உற்பத்தியும்–அவற்றுக்குள்ள கிராக்கியும் கால் பங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; ஆனால் உணவுப் பற்றுக்குறையால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை இப்போதுள்ள அளவிலேயே இருக்கக்கூடும்,

ஐ. நா. உணவு வேளாண்மை நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு மதிப்பீடு இவ்வாறு கூறுகிறது.

வேளாண்மை உற்பத்தி 28 சதவிகிதமும், கிராக்கி 26 சதவிகிதமும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் உற்பத்தி அதிகரிக்கும் என்று அது எதிர்பார்க்கிறது; ஆனால், சராசரி நபர் வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வு காரணமாக இந்த உற்பத்தி உயர்வினால் பணக்கார நாடுகளில் உள்ளவர்களே அதிகப் பயனடைவார்கள் என்றும், சுமார் 42நாடுகளில் தற்போது காணப்படும் ஊட்டச் சத்துப் பற்றுக்குறைப் பிரச்சினை நீடிக்கக்கூடும் என்றும் அது கூறுகிறது.

வீட்டு வசதித் துறையில் தமிழகத்தின் சிறப்பான பணி

ஆளுநர் கே. கே. ஷா மனமுவந்த பாராட்டு

தோட்டத் தொழிலாளர்கட்குச் சொந்தத்தில் வீடு --- அமைச்சர் க. இராசாராம் வெளியிடும் யோசனை

உதகை, அக். 6—

"வீட்டு வசதித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வீட்டு வசதித் துறையில் சிறப்பான பணிகள் செய்யப்பட்டுள்ளன"

என்று கவர்னர் கே. கே. ஷா, காந்தி நகரில் (கண்டல்) அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. டி. வி. வாசுதேவன் வரவேற்புரை நிகழ்த்துகையில், இப்பகுதியில் குறைந்த வருமானக்காரர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தை மேற்கொள்வதற்காக உதகை நகராட்சியிடமிருந்து ஏக்கர் ரூ 10 000 விலை கொடுத்து நிலம் வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

"ரூ. 10 இலட்சம் செலவில் 48 குடியிருப்புகள் கட்டப்படும்; சர்ச் ஹில்லில் ரூ. 18 இலட்சம் செலவில் வீடுகள் கட்டப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் க. இராசாராம்

தமிழ்நாடு வீட்டு வசதி அமைச்சர் க. இராசாராம் அவர்கள், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்; 'சென்னையில் குடிசைவாசிகளுக்கு வீட்டு வசதி கட்டும் திட்டம், இதர மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும்' என்று அவர் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:--

"தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அமைப்பதற்கான யோசனை உள்ளது; இதன்படி, செலவில் 20 சதவிகிதத்தைத் தோட்ட நிர்வாகத்தினர் ஏற்க வேண்டும்.

"மற்றொரு யோசனையும் இருக்கிறது; இதன்படி நாள்தோறும் ரூ. 1 வீதம் 5 ஆண்டுக் காலத்துக்கு வீட்டு வசதி வாரியத்திடம் ஒருவர் செலுத்தினால், 5-வது ஆண்டு முடிவில் ரூ. 6,000 பெறுமான வீடு அவருக்குத் தரப்படும்."

ஒசூரில் காகித ஆலை

கல்கத்தா தொழிலதிபர் நிறுவுவார்

ஒசூர் (தர்மபுரி), அக். 6—

"ஒசூரில் காகித ஆலை ஒன்றை நிறுவ கல்கத்தா தொழிலதிபர் ஜெய்த்திகா ஒப்புக்கொண்டிருக்கிறார்"

என்று ஒசூர் துணைக் கலெக்டர் கடேசன் தெரிவித்தார்.

ஒசூரில் புதிய தொழில்களைத் துவக்குவதற்கான வாய்ப்புக்களை ஆராய்வதற்காகத் திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அழைப்பின்பேரில் அவர் இங்கு வந்தார்.

இத்தொழிற்சாலை, மெல்லிய காகிதங்களை (டிஷ்யூ) உற்பத்திச் செய்யும்.

இங்கு காடுகளில் நிறைய மூங்கில்கள் இருப்பதால் அவ்வாறு காகித ஆலையைத் துவக்க அவர் இசைந்திருக்கிறார்.

தொழிற்சாலையை நிறுவ இரு இடங்கள் அவருக்குக் காண்பிக்கப்பட்டன; ஒசூர் -- தால்லி சாலையில் உள்ள ஓர் இடம் காகித ஆலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது; டிசம்பரில் தொழிற்சாலையை நிறுவ ஜெய்த்திகா விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

கலெக்டர் பத்மநாபனும் -- ...மும் ஜெய்த்திகாவுடன் விவாதித்தபோது, இப்பகுதியில் நிறைய ராகி கிடைப்பதால் இங்கு ராகி கிடைப்பதால் இங்கு ராகிமால்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவலாம் என்று விளக்கியதாகவும், மாதிரிக்கு அவர் ராகியை எடுத்துச் சென்றுள்ளதாகவும் து...ர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தலைவர்கட்காகத் தனி மோட்டார் வண்டி

குடியரசுத் தலைவர் மாளிகைக்கு தருவிப்பு

பம்பாய், அக். 4—

வெளிநாடுகளிலிருந்து வரும் ஆட்சித் தலைவர்களின் பயன்பாட்டுக்காகக் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 'மெர்ஸிடிஸ் பென்ஸ்' கார் ஒன்று வந்திருக்கிறது.

குளிர் சாதனங்கள் கொண்ட இந்த வண்டியில் ஏழு பேர் உட்காரலாம்.

இது பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கியிருக்கிறது. ஜெர்மன் கம்பெனியில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட இந்த வண்டி இன்னும் இரண்டொரு நாட்களில் டில்லிக்கு அனுப்பப்படும்.

தென் சென்னைக்குக் குடிநீர்-கட்டுப்பாடின்றி கிடைக்க வாய்ப்பு

சென்னை, அக் 5—

தியாகராயநகரில் பிரகாச முதலி சாலையில் கட்டப்பட்டுவரும் தலைமைத் தண்ணீரேற்று நிலையம் வேலை முடிந்ததும், அடுத்த ஆண்டு கோடையில் தென் சென்னைப் பகுதியில் குடிநீர் பற்றிய கவலை ஏற்படாது.

மேயர் திரு. சா. கணேசன், இங்கு நடந்துவரும் வேலை எவ்வளவு முன்னேறி இருக்கிறது என்பதை நேரில் வந்து பார்த்தார்; இப்பணியை நடத்தும் பொறியர்களுடன் விவாதித்தார்.

இத்திட்டம் ரூ 73 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; இதுவரையில் 3,000 அடி முக்கியக் குழாய்கள் போடும் வேலை முடிந்துள்ளது; தண்ணீர் இறைவை இயந்திர நிலையம் 1972 மார்ச் திங்களுக்குள் கட்டி முடிந்துவிடும்; அதற்குப் பிறகு இரண்டொரு மாதங்களில் இயந்திரங்கள் அமைக்கப்படும்.

இங்கு தண்ணீர் தொட்டியும் கட்டப்படும்; இது, 'தண்ணீர் மாங்கி' போல இயங்கும். அதிகப்படி தண்ணீரைத் தேக்கிக் கொண்டு--பற்றுக்குறை ஏற்படும் இடங்களுக்கு வழங்கும்.

தியாகராயநகர், மயிலை, சைதை கிண்டி, அடையாறு வட்டாரங்கள் இத்திட்டத்தின்கீழ் வரும்.

தஞ்சை நகரில் கலைஞர்

மாபெரும் வரவேற்பு-- பாராட்டுப் பொதுக்கூட்டம்

அமைச்சர்கள் ப. உ. சண்முகம் -- அன்பில் தர்மலிங்கம் -- சி. பா. ஆதித்தனர் பங்கேற்பு

தஞ்சை, அக். 4—

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு தஞ்சை நகர மக்கள் மாபெரும் வரவேற்பு அளித்தனர்.

முதல் நிகழ்ச்சியாக முதல்வருக்குத் தஞ்சை நகராட்சிமன்றம் சிவகங்கை பூங்காவில் -- பெத்தண்ணன் அரங்கில் வரவேற்பு வழங்கியது; நகரமன்றத் தலைவர் பெத்தண்ணன் தலைமை தாங்கினர்.

நகராட்சித் துணைத் தலைவர் சுல்தான் வரவேற்பிதழ் படித்து அளித்தார்.

ஆள் உயர வெள்ளிப் பேனா ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது.

நகராட்சி மன்றத்தின் சார்பில் முதல்வரிடம் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது.

விழாவில் பேரறிஞர் அண்ணா படத்தை அமைச்சர் ப. உ. சண்முகமும், கலைஞர் படத்தை அமைச்சர் சி. பா. ஆதித்தனரும், தந்தை பெரியார் படத்தை அமைச்சர் அன்பில் தர்மலிங்கமும் திறந்து வைத்தனர்.

நகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த ஆறாயிரம் மாணவ மாணவிகளுக்கான சத்துணவுத் திட்டத்தை முதல்வர் துவக்கி வைத்தார்.

தஞ்சையை அடுத்த வல்லத்தில் பேரறிஞர் அண்ணா சிலையை கலைஞர் திறந்துவைத்தார்.

தொடக்கத்தில் யூ. ஆர். ஜீவரத்தினம் இன்னிசை வழங்கினார்.

மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி தலைமை தாங்கினர்.

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

அமைச்சர்கள் சி. பா. ஆதித்தனர், ப. உ. சண்முகம் ஆகியோர் பேசியபின் முதலமைச்சர் கலைஞர், அண்ணா சிலையைத் திறந்துவைத்தார்.

முதல்வருக்கும் -- அமைச்சர்களுக்கும், பேரூராட்சிமன்றச் சார்பில் வரவேற்பு இதழ் அளிக்கப்பட்டது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக ரூ. 248 முதல்வரிடம் அளிக்கப்பட்டது.

தஞ்சை நகர தி. மு. கழகச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழாவும் -- டாக்டர் பட்டம் பெற்றமைக்காக முதல்வருக்குப்பாராட்டு விழாவும் நடைபெற்றது.

தஞ்சைப் பெரிய கோவிலைப் போலவே மின்விளக்குகளால் கோபுரம் சமைத்து -- மேடை அமைக்கப்பட்டிருந்தது.

கோபுரம் மட்டுமன்றி சுற்றுச் சுவர்களும் அப்படியே அழகுற அமைக்கப்பட்டிருந்தன; மதில்களில் நந்திகளும், மின்விளக்குகளாலேயே 'அண்ணா புகழ் வாழ்க -- கலைஞர் புகழ் வாழ்க' என்ற எழுத்துக்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், கோயிலின் கர்ப்பக்கிரகம் போன்று அமைக்கப்பட்ட இடத்தில் இராசராச சோழன் சிலை அமைக்கப்பட்டிருந்தது.

கூட்டத் தொடக்கத்தில் நாயன இசை அமுதம் பொழிந்தது.

கூட்டத்திற்கு நகராட்சி மன்றத் தலைவர் பெத்தண்ணன் தலைமை வகித்தார்.

வழக்கறிஞர் மாணிக்கவாசகம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. கோவிந்தராசன், எல். கணேசன், மற்றும் இளங்கோ, தஞ்சை நடராசன், மாவட்ட துணைச் செயலாளர் அறந்தாங்கி இராசன், எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., நன்னிலம் நடராசன், அமைச்சர் சி. பா. ஆதித்தனர், மன்னை நாராயணசாமி எம்.எல்.சி, அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், ப. உ. சண்முகம் ஆகியோர் பேசினர்.

இறுதியாகக் கலைஞர் உரையாற்றினர்.

'அண்ணா மாளிகை' கட்டடத் திறப்பு

தஞ்சை ஊராட்சி ஒன்றியத்துக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு 'அண்ணா மாளிகை' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கட்டடத்தை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"இதுபோன்ற கட்டடங்கள் கிராமங்களின் நடுவில் அமைய வேண்டும்; நாளாவட்டத்தில் தொழிற்சாலைகள் கிராமங்களைச் சுற்றி அமைய வேண்டும்; இப்படி அமைவதால், அவற்றின் நிழலில் அமையும் கிராமங்கள் மேலும் சில வசதிகளைப் பெற முடியும் -- சூழ்நிலைகள் இன்பமாக மாறும்."

ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் காந்தியார் படத்தை அமைச்சர் ப. உ. சண்முகமும், அண்ணா படத்தை அமைச்சர் சி. பா. ஆதித்தனரும், கலைஞர் படத்தை மன்னை நாராயணசாமியும் திறந்து வைத்தனர்.

ஊராட்சி ஒன்றியத்தின் 10-வது ஆண்டு சிறப்பு மலரை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வெளியிட்டார்.

விழாவுக்கு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் டி. வி. அந்தோணி தலைமைதாங்கினர்.

சங்கம் அலுவலகம் திறப்பு

அதே இடத்தில் தஞ்சை மாவட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சங்க அலுவலகத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

புதிய கட்டடம் போன்ற வெட்டியால் செய்த மாளிகையை முதலமைச்சருக்கும்—அமைச்சர்கள் ப. உ. சண்முகம், சி. பா. ஆதித்தனர், அன்பில் தர்மலிங்கம் ஆகியோருக்கும் தஞ்சை ஊராட்சி ஒன்றியத் தலைவர் பி எஸ். தங்கமுத்து பரிசாக வழங்கினர்.

மன்னை நாராயணசாமி எம்.எல்.சி. அவர்களுக்கு வெள்ளிக் கேடயம் கொடுக்கப்பட்டது.

திரு. எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., நடராசன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

சூப்பர் மார்க்கெட் கட்டடம் -- அடிக்கல் நாட்டு விழா

தஞ்சை மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் கிளையான தஞ்சை காவேரி சூப்பர் மார்க்கெட் புதிய கட்டடத்துக்கு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டினர்.

தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனர் ஊக்கப் போனசு வழங்கினர்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் டி. வி. அந்தோணி, மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

விழாவுக்குச் சட்டமன்ற உறுப்பினர் எஸ். நடராசன் தலைமை தாங்கினர்.

ரூ. 3.50 இலட்சம் செலவில் இந்தக் கட்டடம் கட்டப்படுகிறது.

தமிழகக் கனிவளத்தைப் பயன்படுத்த உதவுக!

மத்திய அரசுக்கு தொழில் அமைச்சர் செ. மாதவன் கோரிக்கை

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க யோசனை --- நகராட்சி வரவேற்பில் உரை

செங்கற்பட்டு, அக். 6 —

"தமிழ்நாட்டில் கிடைக்கும் இரும்புக் கனியையும் -- மற்ற கனிச் செல்வங்களையும் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசு உதவவேண்டும்; படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இது உதவும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் செங்கற்பட்டு நகராட்சி அளித்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் வற்புறுத்தினர்.

திரு. ஓ. வி. அழகேசனுக்கும் நகராட்சி வரவேற்பு அளித்தது; அதுபோது அவர் பதிலளித்துப் பேசுகையில், 'வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த அதிகம் செய்யப்பட்டுள்ளபோதிலும், இப்பிரச்சினையைத் தீர்க்க இன்னமும் நிறைய செய்யப்பட வேண்டியிருக்கிறது' என்று சொன்னர்.

இதைக் குறிப்பிட்டுப் பேசிய அமைச்சர் மாதவன் அவர்கள், 'சேலம், வடாற்காடு மாவட்டங்களில் கிடைக்கும் இரும்புக் கனியையும், ஏனைய கனிச் செல்வங்களையும் அதிகமாக ஏற்றுமதி செய்யாமல் தொழில்களை ஏற்படுத்தப் பயன்படுத்தினால்தான், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்' என்று கூறினர்.

நகராட்சித் தலைவர் பசுபதி வரவேற்பு மடல்களைப் படித்துக் கொடுத்தார்; தொழில் வளர்ச்சிக்கு அழகேசன் ஆற்றிய பணிகளைப் பாராட்டினர்; 'செங்கற்பட்டில் சிறு தொழில்களை ஏற்படுத்த உதவும்படி அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

துணைத் தலைவர் அன்சார் நன்றி கூறினர்.

ஜிப் தொழிற்சாலையில்...

முன்னதாக ஜிப் தொழிற்சாலைக்குச் சென்று அமைச்சர் அதைப் பார்வையிட்டார்.

ஜப்பானில் செய்யப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு நவீன நைலான் ஜிப் தயாரிப்பதற்காகத் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்குள்ள திட்டம் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது; அரசின் உதவி இதற்குக் கோரப்பட்டது.

அமைச்சருக்கு நிர்வாகிகளும்-- ஊழியர்களும் கூட்டாக வரவேற்பு அளித்தனர்.

நிர்வாகிகளுக்கும்--ஊழியர்களுக்குமிடையே நிலவும் சுமுகமான உறவை அமைச்சர் பாராட்டினர். நிர்வாகிகளின் கோரிக்கைக்கு அரசு சாத்தியமான உதவியையெல்லாம் அளிக்கும்" என்றார்.

பின்னர், திரு. அழகேசனைப் பாராட்டுவதற்காக நடந்த கூட்டத்தில அமைச்சர் கலந்து கொண்டார்; அழகேசனுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

எம். பக்தவத்சலம், விசுவாநாதன் எம்.எல்.ஏ., சிட்டிபாபு எம்.பி., மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. டி. எஸ். மணி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பேசினர்.

'விதை' என்ற பெயரில் சாதாரணக் கோதுமை

உ. பி. மாநில அரசே விற்கிறதாம்!

பந்த் நகர், அக். 5—

"உணவுக் கார்ப்பரேஷனிடம் சாதாரணக் கோதுமையை வாங்கி, அதை, 'விதை' என்று கூறி உழவர்களுக்கு அரசு விற்றுவருவது உண்மையே"

என்று, உ. பி. வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

"நாட்டில் போதிய அளவு விதை இல்லாததே இதற்குக் காரணமாகும்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உ. பி.-யில் 5 இலட்சம் குவிண்டால் விதை தேவைப்படுகிறதாம்; ஆனால், விதை நிறுவனத்திடம் 82 000 குவிண்டால் விதை மட்டுமே உள்ளதாம்.

பீகாரில் 6 இலட்சம் விதை தேவைப்படுகிறதாம்.

இந்த நிலைமையில், 12,000 குவிண்டால் விதை நேபாளத்துக்குத் தருவதாக வேறு, அரசு உறுதி கூறியிருக்கிறதாம்.

அரசுச் செய்திகள்
குத்தகை-
ஒப்பந்தப் புள்ளி
வேலைவாய்ப்பு-
விளம்பரங்கள்
அனைத்தையும்
அறிந்து கொள்ள
வாங்குங்கள்
தமிழரசு
தமிழ்நாடு அரசின்
திங்கள் இருமுறை ஏடு:
அரசினர் தோட்டம், சென்னை.2
விலை 35 காசு

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

மதுரைக் கோட்டச் செயற்குழுக் கூட்டம்

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மதுரைக் கோட்டச் செயற்குழுக் கூட்டம், 5—9—71-ல் குற்றாலத்தில், மத்திய சங்கத் துணைத் தலைவர் வ. நம்மாழ்வார் தலைமையில் நடைபெற்றது.

மதுரைக் கோட்டத்தில் உள்ள திண்டுக்கல், மதுரை, விருதுநகர், காரைக்குடி, திருநெல்வேலி, செங்கோட்டை ஆகிய கிளைகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

செங்கோட்டை கிளைச் செயலாளர் செல்லதுரை வரவேற்றார்.

சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் -- மாற்றுச் சங்கங்களின் வீழ்ச்சி பற்றியும் -- தொழிலாளர்களின் குறைகளைப் போக்க நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் -- இன்னும் அதிகமான அளவில் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் தலைவர் எடுத்துக் கூறினர்.

அடுத்து, கோட்டச் செயலாளர் ஞானப்பிரகாசம் மதுரைக் கோட்டத்தில் சங்கம் ஆற்றிய பணிகள் பற்றியும் -- இனி ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் அறிக்கை தந்தார்; அறிக்கையின் பேரில் கிளைச் சங்க நிர்வாகிகள் விவாதித்தனர்.

பின்னர், விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மேலும் இடைக்கால நிவாரணம் கோரியும், தொழிலாளர்களிடையே குன்றெனக் குவிந்து வரும் எண்ணிலாக் குறைகளைப் பற்றித் தொகுத்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் ஜி. பி. சோமசுந்தரம், உடுமலை நாராயணன், கடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி ஆகியோர் மறைவிற்கும், வங்காள தேச சுதந்தரப் போராட்டத்தில் உயிர் நீத்த விடுதலை வீரர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

வங்காள தேசத்தை சுதந்தர நாடாக விரைவில் அங்கீகரிக்க வேண்டும் என இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு 'டாக்டர்' பட்டம் வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், தமிழக மேலவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பெற்ற தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால், நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட கமலநாதன் ஆகியோரைப் பாராட்டியும், மதுரையில் அண்மையில் நடைபெற்ற பளு தூக்கும் போட்டியில் தென்னக இரயில்வேயின் 'சேம்பியனாக'த் தேர்வு செய்யப்பட்ட செங்கோட்டை கிளைச் செயலாளர் செல்லத்துரை அவர்களைப் பாராட்டியும், அனைவருக்கும் சங்கத்தின் மகிழ்ச்சியைத் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குழாய் வடிவு அமைப்புள்ள ஒலிபரப்பிகளுக்குத் தடை

சென்னை, அக். 5—

அக்டோபர் 21-ந் தேதி நள்ளிரவுக்குப்பின், குழாய் வடிவமுள்ள ஒலிபரப்பிகளை (ஸ்பீக்கர்களை)ப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது; இவற்றைப் பயன்படுத்துபவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்,

தவிர, இவ்வாறு பயன்படுத்தும் ஒலி பரப்பிகள் கைப்பற்றப்படும்.

"அக்டோபர் 21-ந் தேதிக்குப் பிறகு, ஹாரன் அல்லது குழாய் வடிவ ஒலிபரப்பிகளைப் பயன்படுத்தவோ அல்லது வாடகைக்கு விடவோ வேண்டாம்" என்று அனைவருக்கும் போலீசுக் கமிஷனர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சிண்டிகேட் தலைமைக்குத் தலைவலி

எஞ்சியிருந்த பெருந் தூண்களும் சரியும் நிலை

இராம் சுபாக் சிங்—தாரகேசுவரி சின்கா அணி வெளியேறும்?

புதுடில்லி, அக். 6—

சிண்டிகேட் காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் பூசல் நாளும் வளர்த்து வருவதாகவே நடைபெற்று முடிந்த அதன் செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது.

சிண்டிகேட் காங்கிரசுத் தலைவர்களின் பூசாரி மனப்பான்மையை அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் இராம் சுபாக் சிங், சில நாட்களுக்குமுன் வெளிப்படையாகவே கண்டித்திருந்தார்; இதுபோல், தாரகேசுவரி சின்காவும் தலைவர்களின் போக்கைக் கடுமையாகக் கண்டித்திருந்தார்.

கட்சிக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை யாரும் வெளிப்படையாகக் கண்டிக்கக்கூடாது என்றும், கட்சிக் கூட்டங்களிலேயே அவை விவாதிக்கப்பட வேண்டுமென்றும் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; மீறி நடப்பவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இதை எதிர்த்து இராம் சுபாக் சிங், கூட்டத்திலிருந்து வெளியேறினர்; இரண்டாம் நாள் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவேயில்லை.

இந்தத் தீர்மானம்பொருளற்றது என்றும், என்னைப் பொறுத்தவரையில் எங்கு—எப்பொழுது இலட்சியத்தைவிட்டுக் காங்கிரசு நழுவிச் சென்றாலும் அதனை எடுத்துக்கூறத் தாம் தயங்கப்போவதில்லை என்றும் இராம் சுபாக் சிங், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கட்சியைவிட்டு வெளியேறத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆயினும், இராம் சுபாக் சிங்கின் நெருங்கிய நண்பர்கள் சிலர் கட்சிக்கு முழுக்குப் போட முடிவு செய்திருப்பதாகவும், இவர்களில் ஒருவரான முன்னாள் தலைமையமைச்சர் லால் பகதூர் சாஸ்திரியின் மகன் அரி சாஸ்திரி தமது இராஜிநாமா கடிதத்தை அனுப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இராம் சுபாக் சிங் மீதும், தாரகேசுவரி சின்கா மீதும் குற்றஞ்சாட்டிப் பேசப்பட்டதே இவர் இராஜிநாமாவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கலைஞர் கருணாநிதி கண்டனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிற்கு வந்ததாகவும், 'அண்ணாவைக் கடவுளாகத் தொழுகிறார்கள்' என்றும் மனம் நொந்திருக்கிறார்; 'கருணாநிதி பற்றித் தனி நபர் வழிபாடு வளர்ந்து வருகிறது' என்று வருத்தப்பட்டிருக்கிறார்.

தனி நபர் வழிபாடு பற்றி ஏற்கனவே நாம் யார் யாருக்கோ பதில் சொல்லிவிட்டோம்.

'தனி நபர் வழிபாடு' என்ற ஒன்று இல்லாத இயக்கம் தி. மு. கழகம்தான்; 'பெருமைகள் – புகழுரைகள், கழகத்திலுள்ள அத்தனைப் பேருக்கும் சொந்தம்' என்ற அளவில்தான் அவற்றை ஏற்கிறோமே தவிர, 'நம்மைத்தான் புகழ்ந்தார்கள்; ஆகவே, நமக்குத்தான் அந்தப் பெருமைகள் எல்லாம் என்று நினைப்பவன் அடிமுட்டாள்' எனக் கருதுபவர்கள் நாங்கள்!

அப்படிப்பட்ட சனநாயக வழியில்தான் அறிஞர் அண்ணா அவர்கள், கழகத்தை—எங்களை வளர்த்திருக்கிறார்கள்; ஆகவே அந்த நிருபர் கூறியதற்காக வருத்தப்படவில்லை; அவரது கட்டுரையில், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை தப்பற்றி உயர்வாக ஒரு வார்த்தைகூட இல்லை!

'இந்தப் பிச்சைக்காரர் நிதிக்கு இதுவரை எவ்வளவு தொகை சேர்ந்தது என்று தெரியவில்லை – அந்தத் தொகை –எந்தத் தலைப்பில்–எங்கே போடப்பட்டிருக்கிறது என்றும் தெரியவில்லை' என்று எழுதியிருக்கிறார்.

பம்பாயிலிருந்து வந்தவர் எழுதினாரா – அல்லது இங்கிருப்பவரே பம்பாயிலிருந்து வந்தவர் போல் எழுதினாரா என்பது தெரியாது!

ஆனால், பிச்சைக்காரர்களுக்காக ஒரு காசுகூட நிதி கொடுக்காதவர்தான் இப்படி எழுதியிருக்கிறார்!

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகத் தரப்படும் தொகை அனைத்தும் ரிசர்வ் பாங்கியில் போடப்படுகிறது; அந்தப் பாங்கியில், 'பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி' எனும் தலைப்பில்தான் அந்தக் கணக்கு வைக்கப்படுகிறது.

தமிழக அரசின் நிதித்துறைத் துணைச் செயலாளர் (டெபுடி செகரட்டரிதான்) இந்த நிதியின் பொருளாளர்!

இப்படிப்பட்ட அமைப்புள்ள நிதியைத்தான் பம்பாய் ஏட்டைச் சார்ந்தவர் குறை கூறுகிறார்!

உண்மையைச் சொல்லப் போனால், ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குக்கூட—பஞ்சாயத்துத் தலைவருக்குக்கூட 'செக்'கில் கையெழுத்துப் போடும் அதிகாரம் உண்டு; ஆனால், அரசாங்க 'செக்'குகளில கையெழுத்துப் போடும் அதிகாரம்கூட அமைச்சர்களுக்குக் கிடையாது!

வெள்ளைக்காரன் காலத்திலிருந்து எந்த அதிகார அமைப்பு கோட்டையில் நிர்வாகம் செலுத்திவருகிறதோ—அதே முறைதான் இப்போதும் தொடர்ந்து வருகிறது.

இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் ஆங்கில ஏட்டில் முழு நீளக் கட்டுரை எழுதின பயன் என்ன?

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியின் கணக்கு அரசாங்க வெளியீடான 'தமிழரசு' இதழில் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது.

வெளியூர்களில் என்னிடம் தரப்படும் பிச்சைக்காரர் நிதிக்கான 'செக்'குகள்—பணம் ஆகியவை பற்றிய கணக்கு—நான் ஏறியவுடன்—எனது தனிச் செயலாளர் மூலம் எனக்குத் தரப்படும்; சென்னை வந்ததும அவர்கள் அந்த நிதியை முறைப்படி உரிய இடத்தில சேர்த்துவிடுவர்.

இப்படி நாணயமான முறையில்—நல்ல நோக்கத்தோடு நடைபெறும் நற்பணிக்கும் கேடு சொல்ல வடநாட்டிலிருந்து ஆட்கள் வருகிறார்கள்!

கணக்குக் கேட்பதென்றால், முறைப்படி சட்டமன்றத்தில் மூலம் கேள்வியாக, 'பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு இதுவரை எவ்வளவு தொகை சேர்ந்தது' என்று கேட்டால், நான் உடனே பதில் கூறியாக வேண்டும்.

'அந்தத் தொகை எந்த வங்கியில் போடப்பட்டுள்ளது—எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது—எத்தனைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன' என்று 10 துணைக் கேள்விகள் கேட்கப்பட்டாலும், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், வடநாட்டிலிருந்து வந்ததுபோல ஏதோ எழுதி, எங்கள் நாணயத்தைப் பற்றிப் பொதுமக்களிடம் தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடலாம் என்று கருதினால் அது நடக்காது!

அந்தக் கட்டுரையாளர் எவ்வளவு தூரம் தமிழகத்தைப் பார்த்திருக்கிறார் என்பதை அடுத்த வரியிலேயே மெய்ப்பித்துவிட்டார்!

சென்னையின் தெருக்களிலுள்ள விளக்குகளிலெல்லாம் ஒளியே இல்லையாம்!

நாம் கேட்கிறோம்—'ஒளி விளக்கில் இல்லையா—அல்லது அவரது விழியில் இல்லையா' என்று!

மாலகம் ஆதிசேஷய்யாகூட, 'சென்னை நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது; ஆனால் சில இடங்கள் அசிங்கமாக இருக்கின்றன' என்றார்; உடனே பத்திரிகைகள், 'சென்னை நகரே அசிங்கமாகஇருக்கிறது என்று ஆதிசேஷய்யா கூறினார்' என்று செய்தி வெளியிட்டன; 'நான் அப்படிப் பேசவில்லை' என்றுகூட மாலகம் ஆதிசேஷய்யா மறுத்திருக்கிறார்; அப்படியிருந்தும், பத்திரிகைகள் நம்மைப் பற்றித் தவறாக எழுதிக்கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் பொருட்படுத்தாமல், நாம் நாட்டில் ஆற்ற வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன!

'இவற்றுக்கெல்லாம் அரசு இருக்கிறது—அது பார்த்துக் கொள்ளும்' என்றில்லாமல், ஆக்கப் பணியில் ஆர்வம் கொண்டு மக்கள் அனைவரும் அதில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களுக்கும் தடை?

இலங்கை அரசின் கெடுபிடி

கொழும்பு, அக். 5—

தமிழ்நாளிதழ்கள் இறக்குமதியை அடுத்த ஆண்டுத் துவக்கத்திலிருந்து தடை செய்வதென இலங்கை அரசு முடிவு செய்திருக்கிறது.

எனினும், சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு குறிப்பிட்ட அளவுக்குத் தமிழ் ஏடுகள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமாம.

அஞ்சல்–தந்தித் துறை அமைச்சா திரு. செல்லையா குமர சூரியர் (தமிழர்) தலைமையிலுள்ள குழு இப்பிரச்சினையைப் பரிசீலனை செய்தது; அரசின் முடிவு இக்குழுவின் சிபாரிசை அடிப்படையாக கொண்டதாகும்.

தமிழ் நாளிதழ்கள் இறக்குமதி செய்வதற்கான பெர்மிட்டுகள் இவ்வாண்டு இறுதியில் காலாவதியாகும். பின்னர், தமிழ் நாளிதழ்கள் இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணிகள் ஒதுக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

இப்போது இலங்கையில் நிறைய தமிழ் நாளிதழ்கள் அச்சிடப்படுகின்றனவாதலால், வெளிநாட்டிலிருந்து தருவிப்பதற்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரப் பூர்வமாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் அச்சாகும் ஏடுகளின் மதிப்பு போதுமான அளவு முன்னேற்றமடைந்தபின், குறிப்பிட்ட அளவு சஞ்சிகைகள் இறக்குமதியும் நிறுத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செல்லத் தெரு, சென்னை-1[illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் விபத்து

கொதிகலன் வெடித்து ஏழு பேருக்குக் காயம்

நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் காரணமாக 7-பேர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

இந்நிலையத்தின் கொதிகலன் வெடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையத்தைச் சோதனை செய்த பிறகே இனிமேல் இது இயங்கத் துவங்கும் என்றும் கூறப்படுகிறது.

நிகழ்ச்சி

சீரணிச் சார்பில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியளிப்பு விழாவும் டாக்டர் பட்டம் பெற்ற கலைஞருக்குப் பாராட்டு விழாவும் நேற்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு, சீரணி அமைச்சர் திரு. என். வி. நடராசன் தலைமை வகித்தார்.

சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் வரவேற்புரையாற்றினார்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக சீரணிச் சார்பில் வசூலிக்கப்பட்ட ரூ. 44,444-ம், தமிழ்நாடு தொழிலாளர்—தொழிலதிபர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரூ. 6892.50-ம முதலவரிடம் அளிக்கப்பட்டது.

கலைஞரைப் பாராட்டி அமைச்சர்கள் அன்பில தர்மலிங்கம், சத்தியவாணிமுத்து, மற்றும மாவட்டச் சீரணித தலைவர்களான சேலம் ஈ. ஆர். கிருஷ்ணன், விருத்தாசலம் செல்வராசு, திருச்சி இராசு, இரா. தர்மலிங்கம் எம்.எல்,சி., கே. டி. எஸ். மணி, மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் மால்கம் ஆதிசேஷயா ஆகியோர் பேசினர்.

சீரணியின் சார்பில் முதல்வருக்குக் கேடயம் வழங்கப்பட்டது; ஏராளமான கைத்தறியாடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

விழா முடிந்ததும் திரைப்பட இசையமைப்பாளர் டி. ஆர். பாப்பா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் கலந்துகொள்ள இயலாதது குறித்து டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள அனுப்பியிருந்த செய்தியில், பிச்சைக்காரர் மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டுள்ள கலைஞருக்குப் பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7–10–71

நகரி

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 7-மணிக்கு சந்தைத் தோப்பில்; தலைவர்: கே. முகம்மது அலி; பேசுவோர்: எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., ஏ. பரந்தாமன் எம்.எல்.ஏ., என். எஸ். பலராமன் எம்.எல்.ஏ., ஈ. எஸ தியாகராசன் எம்.எல்.ஏ., கே. ஜி. முருகேசன், என். பி. வீராசாமி, மற்றும் பலர்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

அக் 9 காலை 9-30 மணி: நாமக்கல் வட்டம் எருமைப்பட்டித் துணைப் பதிவாளர் அலுவலகத் திறப்பு; மாலை 5 மணி: சேலம் கிழக்கு (அம்மாப்பேட்டை) துணைப் பதிவாளர் அலுவலகத் திறப்பு; 6 மணி: தமிழ்நாடு உதவி பதிவாளர்கள் சங்கம—சேலம் மாவட்டக் கிளை வரவேற்பு; இரவு 7 மணி: சேலம்—அம்மாப்பேட்டை பொது மக்கள் வரவேற்பு.

அக். 10 காலை 9 30 மணி: கோவை—நெசவாலைத் தொழில் கருத்தரங்கில் கலந்துகொள்ளுதல்.

அடிக்கல் நாட்டு விழா

எழும்பூர்த் தொகுதி சேத்துப்பட்டு—மீனம்மாள் சிவராஜ் நகர் குடிசைப் பகுதி மாற்றும திட்ட அடிக்கல் நாட்டு விழா, 7-10-71 மாலை 6 மணிக்கு மேயர் சா. கணேசன தலைமையிலும்—முரசொலி மாறன் எம்.பி. முன்னிலையிலும் நடைபெறும்; முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டி உரை நிகழ்த்துவார்; வரவேற்புரை: இராம. அரங்கண்ணல் எம.எல்.ஏ.

ஆயுதத் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நீக்கம்

கல்கத்தா, அக். 6—

காசிபூர்—இச்சாபூர்—டமடம் ஆகிய இடங்களிலுள்ள பாதுகாப்புத் தளவாடத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 32 மத்திய அரசு ஊழியர்கள், அரசியல் சட்ட 301-வது பிரிவின்கீழ் உடனடியாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்கள் நீக்கப்பட்டதற்கான காரணம ஏதும் கூறப்படவில்லை.

நாகாலாந்தில் 4 அமைச்சர்கள் பதவி விலகல்

கோகிமா, அக். 6—

முதலமைச்சர் சேமாவின் கோரிக்கைகேற்ப, நாகாலாந்து அமைச்சரவையிலிருந்து நான்கு அமைச்சர்கள் இராஜிநாமா செய்துவிட்டனர்.

சென்னை மாநகராட்சி இடைத்தேர்தல்

19-வது வட்டத்தில் நேரடிப் போட்டி

சென்னை, அக். 6—

சென்னை மாநகராட்சியில் 19, 60-வது வட்டங்களுக்கு இம்மாதம் 20-ந்தேதி நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் மொத்தம 8 பேர் போட்டியிடுகின்றனர்.

19-வது வட்டத்தில், தி. மு. கழக உறுப்பினர் திருமதி காமாட்சி செயராமனுக்கும் — சிண்டிகேட் உறுப்பினர் ரங்கபாஷ்யத்துக்கும் இடையே நேரடிப் போட்டி நடைபெறுகிறது.

60-வது வட்டத்தில் இந்திரா காங்கிரசு வேட்பாளர் எஸ். ஆர். டி. மணி உட்பட 6 பேர் போட்டியிடுகின்றனர்.

திரு. மணி அவர்களுக்குத் தி. மு. கழகம் ஆதரவு தருகிறது.

சிண்டிகேட் வேட்பாளரும் இங்கு போட்டியிடுகிறார்.